ශ්‍රී ලංකා ... සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## புவியியல் - භූගෝල විද්‍යාව

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

**பகுதி** I

♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

1. நெற் செய்கையை நாசம் செய்யும் பூச்சியினங்களை அழிக்கக்கூடியது ................................ ஆகும். (செம்பகம் , வெட்டுக்கிளி, காகம்)

2. பாடசாலைத் தோட்டத்தின் வடிவத்தை அறிந்து கொள்ள ........................................ அவசியமாகும். ( மதில், வேலி,எல்லை)

3. பாடசாலையொன்றின் அடையாளத்தை குறித்துக் காட்டும் போது கல்வி வலயத்திற்கு அடுத்தபடியாக ......................... பயன்படுத்துவர். (மாவட்டம், கல்விப்பிரிவு, கல்விக் காரியாலயம்)

4. வீட்டு அயற்சூழலில் மேற்கொள்ளும் கைத்தொழில் ...................... கைத்தொழிலைச் சார்ந்தது. ( (பாரியளவிலான , சிறியளவிலான, நடுத்தர)

5. வடமத்திய மாகாணம் அநுராதபுரம், ..................................... மாவட்டங்களைக் கொண்டுள்ளது. ( மாத்தளை, வவுனியா, பொலன்னறுவை)

♦ இலக்கம் 6-10 வரையுள்ள வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குள் இடுக.

6. சித்திரப் படத்தினை விட புனையா வரைபடத்தில் புவியியல் அம்சங்களின் வடிவம், தூரம், அமைவிடம் என்பவற்றை தெளிவாகக் காட்டலாம். (........)

7. வௌவால் தாவரங்கள் காய்ப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கும் (........)

8. இலங்கையின் மிகச்சிறிய நிர்வாக அலகு மாகாணமாகும். (........)

9. மேற்குத்திசைக்கும் வட திசைக்கும் இடையில் வடமேற்குத் திசை காணப்படும். (........)

10. இலங்கையின் மலைப்பாங்கான பகுதியில் பீட்ரூட் பயிர்ச்செய்கை இடம் பெறும் (........)

♦ இலக்கம் 11-15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

11. மழை வருவதற்கு முன் வானத்தில் அவதானிக்க முடிவது யாது?
    1) நீல நிறத்திலான முகில்களை அவதானிக்கலாம்.
    2) இளஞ்சிவப்பான முகில்களை அவதானிக்கலாம்.
    3) இருள் சூழ்ந்த தடித்த முகில்களை அவதானிக்கலாம்.
    4) தெளிவான வானத்தை அவதானிக்கலாம்.

12. சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்து இரு கைகளையும் இரண்டு பக்கமும் நீட்டி, நிற்கும் போது உங்கள் வலது கைப்பக்கம் அமைந்திருக்கும் திசை யாது?
1) வடக்கு 2) தெற்கு 3) கிழக்கு 4) மேற்கு

13. நுவரெலியா மாவட்டத்தின் மழைவீழ்ச்சியானது 100 mm உம், வெப்பநிலையானது $12^0C$ உம் ஆகும். இங்கு மழைவீழ்ச்சி 100 mm ஐ அளக்கப்பயன்படுத்திய கருவி யாது?
1) வெப்பமானி 2) அனிலமானி
3) மழைமானி 4) காற்றுதிசைகாட்டி

14. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாவட்டங்கள் ஒன்றிணைவதன் மூலம் உருவாகும் நிர்வாகப் பிரிவு யாது?
1) கிராமம் 2) நகரம் 3) மாகாணம் 4) மாவட்டம்

15. இலங்கையில் ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் செய்கை பண்ணப்படும் பிரதான பயிர் யாது?
1) தேயிலை 2) இறப்பர் 3) தென்னை 4) நெல்

- **இல 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு நிரல் Aயிலுள்ளவற்றை நிரல் Bயுடன் இணைப்பதன் மூலம் பெறப்படும் சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| A | | B |
|---|---|---|
| 16. தாவரங்களின் வளர்ச்சிக்கு உதவும் வாயு | (........) | 1. மில்லி மீற்றர் |
| 17. குருநாகல் மாவட்டத்தின் எல்லையாகும். | (........) | 2. கிளி |
| 18. மழைவீழ்ச்சியை அளக்கும் அலகு | (........) | 3. நைதரசன் |
| 19. சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்கு உதவும் பறவை | (........) | 4. காகம் |
| 20. காற்று வீசும் திசையை அறிந்து கொள்ள உதவும் உபகரணம் | (........) | 5. காற்றுத்திசை காட்டி |
| | | 6. கம்பஹா |
| | | 7. கொழும்பு |
| | | 8. அனிலமானி |


(20 X 2 = 40)

Education கல்வி අධ්‍යාපන

**பகுதி II**


♦ **முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

1. பின்வரும் இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




   i. இலங்கையின் கிழக்குக் கடற்கரையோரத்தை எல்லைகளாகக் கொண்ட I,J எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களைப் பெயரிடுக. (4 புள்ளி)
   I- ...............................................................
   J- ...............................................................
   ii. இலங்கையில் மிகச்சிறிய மாவட்டத்தைக் குறிப்பிடும் எழுத்தினை அடையாளப்படுத்தி, அது அமைந்துள்ள மாகாணத்தை எழுதுக.(4 புள்ளி)
   மிகச்சிறிய மாவட்டம் -
   அமைந்துள்ள மாகாணம் -
   iii. கிழக்கு மாகாணத்திற்குரிய மாவட்டங்களைக் குறிப்பிடும், எழுத்துக்களை எழுதி, அம்மாவட்டங்களையும் எழுதுக. ( 4 புள்ளி)
   iv. உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை குறிப்பிடும் எழுத்து யாது? ( 2 புள்ளி)
   v. இலங்கையில் அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம் எது? ( 2 புள்ளி)

2. i. வானிலை மூலகங்கள் மூன்று தருக. (3 புள்ளி)
   ii. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.





**மேலிருந்து கீழ்**

1. பல்வகையான கழிவுப்பொருட்களை உக்கச் செய்வதற்கு உதவும்
2. வடமாகாணத்திற்குரிய மாவட்டம் ஒன்று
3. வடமேல் மாகாணத்திற்கு உரித்தான மாவட்டங்களில் ஒன்று
4. காற்றின் வேகத்தை அளக்கப்பயன்படும் உபகரணம்

**இடமிருந்து வலம்**

5. இலங்கையில் வடகிழக்குத் திசையில் கடலுடன் கலக்கும் ஒரு நதி
6. வெப்பத்தை அளக்கப்பயன்படும் உபகரணம்
7. இலங்கையில் மிகப் பெரிய மாவட்டம்
8. இவற்றைச் செய்வதற்கு பெரும்பாலும் மரங்களைப் பயன்படுத்துவர்

3. பின்வரும் உருவினைப் பயன்படுத்தி, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




i. இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள செயற்பாடு யாது? (2 புள்ளி)

ii. இலக்கம் 1,2 இனால் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டை பெயரிடுக. (4புள்ளி)


iii. இலக்கம் 3இனால் காட்டப்பட்டுள்ள முகில்களின் உருவாக்கம் எவ்வாறு ஏற்படும்? (2 புள்ளி)

iv. இலக்கம் 4 இனால் குறிக்கப்பட்டுள்ள செயற்பாட்டை பெயரிடுக. (2 புள்ளி)

v. இலக்கம் 4இன் மூலம் காட்டப்படும் செயற்பாட்டினால் கிடைக்கும் பயன்களில் ஒன்றை குறிப்பிடுக. (1 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

4. பின்வரும் பல்வகையான மதக்குறியீடுகளின் மூலம் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



A B C D

i. A,B,C,D எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள மதக்குறியீடுகளுக்குரிய மதங்களை ஒழுங்குமுறையில் எழுதுக. (4 புள்ளி)

ii. இம்மதங்களுக்குரிய மத விழாக்கள் ஒன்று வீதம் தருக (4 புள்ளி)

iii. உமது பிரதேசத்தில் சமூக மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட கழகங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஒன்று வீதம் தருக. (3 புள்ளி)

5. இலங்கையில் பாரம்பரிய தொழிநுட்பத்திறன்களை அடிப்படையாக் கொண்ட கைத்தொழில் சம்பந்தமான அறிவினைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

i.

| கைத்தொழில் | பிரதேசம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|
| பிரம்பு உற்பத்தி | 1...................... | 2...................... | மேல்மாகாணம் |
| 3...................... | அம்பலாங்கொட | காலி | 4...................... |
| பாய்கள் | 5...................... | கண்டி | 6...................... |
| 7...................... | மொரட்டுவ | கொழும்பு | 8...................... |

(8 புள்ளி)

ii. உமது பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களைக் கொண்டு செய்யக்கூடிய கைத்தொழில் வகைகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)


6. பல்வகைப் பிரதேசங்களுக்குரிய சிறப்பான விவசாய நடவடிக்கைகளும், விளைவிக்கப்படும் பயிர்வகைகளும் பற்றி பின்வரும் உருக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளன.



A



B



C



D

i. இலங்கையில் A,C எனும் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக. (4 புள்ளி)

ii. B,D எனும் பிரதேசங்களில் வாழும் மக்களின் ஜீவனோபாயத்துக்காக மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இரண்டு வீதம் தருக. (4 புள்ளி)

iii. C எனும் பிரதேசத்தில் வாழும் மக்களின் தொழில்கள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

kalvi.lk

7. கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு சேவைகள் சம்பந்தமாக கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.



i. மேலே குறிப்பிட்டுள்ள சேவைகளுள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் சேவைகள் 4 எழுதுக. (4 புள்ளி)

ii. அரசாங்கம் சலுகை விலைகளில் வழங்கப்படும் சேவைகள் இரண்டினைப் பெயரிடுக. (4 புள்ளி)

iii. மேற்கூறப்பட்ட சேவைகளிலிருந்து நீர் நன்மையைப் பெற்றுக்கொள்ளும் பொழுது நாட்டிற்காக நீர் ஆற்றும் கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**